Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 20 [02-06-93] புதன் கிழமை ஓசை 104

## மூன்று வாரங்களில் அடையாள அட்டை

தேசிய அடையாள அட்டைகள் விண்ணப்பிக்கப்பட்ட மூன்று வாரங்களில் விநியோகிக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் புதியதாக அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பிப்போர் பெரும் நன்மை அடையவுள்ளனர். இதேவேளை காணாமல்போன அல்லது சிதைந்துபோன அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பிப்போர் இரண்டு வாரங்களுக்குள் அவற்றை மீளப்பெறவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்றும் ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் கூறியுள்ளார். 1989ஆம் ஆண்டு காலப்பகுதியில் தென்னிலங்கையின் பல பகுதிகளிலும் ஜே. வி பி யினரால் அடையாள அட்டைகள் பறிக்கப்பட்டு அழிக்கப்பட்டமை தெரிந்ததே. இவ்வாறு அடையாள அட்டைகளை இழந்தோரும் இத் திட்டத்தால் நன்மை அடைவர் என ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

# நொச்சிமோட்டையில் விமான குண்டுவீச்சு!

## எறிகணை வீச்சும் தீவிரம்!!

[கொழும்பு]

வவுனியா - நொச்சிமோட்டையில் நேற்று சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதல் நடாத்தியதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. மேலும் அப்பகுதியை நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டதாகவும் அப்பகுதியில் இடையிடையே துப்பாக்கி வேட்டுக்கள் கேட்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி தெரியவருவதாவது;

நேற்று முன்தினம் நொச்சிமோட்டையில் நடைபெற்ற மோதலை அடுத்து நேற்று இப்பகுதியில் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலும் எறிகணை வீச்சும் நடத்தியதாக வவுனியாப் பகுதி மக்கள் தெரிவித்ததாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் நொச்சிமோட்டையில் அமைந்திருந்த படையினரின் முன்னணி நிலைகள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில்படையினருக்கும் புளொட் குழுவினருக்கும் பெரும்சேதம் ஏற்பட்டது தெரிந்ததே.

இதனிடையே நேற்று நொச்சிமோட்டை பகுதியில் படையினர் பொதுமக்கள் நடமாடத்தடை விதித்ததாக பி. பி. ஸி. தெரிவித்தது. இப்பகுதியில் இடையிடையே துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டவண்ணமிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## கொழும்பில் தமிழரிடம் மிரட்டி நிதி வசூல்!

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து கொழும்பில் விடுதிகளில் தங்கியிருக்கும்தமிழர்கள் தற்போது நிதிதிரட்டும் குழுக்களினாலும் மிரட்டப்பட்டு வருகின்றனர்.

திட்டமிட்ட வகையில் ஒரு குழுவொன்று இவ்வாறு விடுதிகளில் தங்கியிருக்கும் தமிழர்களிடம் வந்து தண்ணீர்ப் பந்தல் நிதி. விகாரை திருத்தநிதி தருமாறு வற்புறுத்தி வருகின்றனர்.

இந்தக் கோஷ்டியினர் போலியான ஒரு நிதிவரவு பட்டியல் ஒன்றை தயாரித்து அதில் பெருந்தொகை பணவரவுகளை தாமே எழுதிவிட்டு வந்து தமிழ்மக்களிடம் அந்தத் தொகைக்கு சமமான நிதியை தருமாறு வற்புறுத்துகின்றனராம்.

# தமிழ் இளைஞர்களைத்தேடி கொழும்பில் தீவிர வேட்டை

கிளாலி - பூநகரி

## படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச்சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ் மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## மீட்புநிதி சேகரிப்பு

இன்று புதன்கிழமை நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் மாலை 3.00 மணி தொடக்கம் 4.00 மணி வரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை காலமும் மீட்புநிதிக் கடனைச் செலுத்தத் தவறியோர் இக் குறித்த நேரத்தில் தமது மீட்புநிதிக் கடனைச் செலுத்த முடியும் என தமிழீழ மீட்புநிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## 500 ரூபா

நாணயக் குற்றி

(கொழும்பு)

எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலங்கை மத்தியவங்கிக்கிளையினால் 500 ரூபா பெறுமதியான நாணயக்குற்றி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வெளியிடப்படவுள்ளது. வெள்ளியிலான இந்த நாணயம் மகிந்தர் இலங்கைக்கு வந்த 23ஆம் நூற்றாண்டையொட்டி வெளியிடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தப்பியோடியவர் சரண்

மேலூர் இலங்கை அகதிகளுக்கான முகாமில் தங்கியிருந்து தப்பிப்போன இலங்கைத் தமிழரான யோகராஜ் நேற்று முன்தினம் சென்னையில் காவல் துறையினரிடம் சரண் அடைந்துள்ளார். இவர் ஈ. பி. ஆர். எல். எப். அமைப்பை சேர்ந்தவர் என்றும், தற்சமயம் புழல் அகதி முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் காவல் துறை வட்டாரங்கள் கூறி

# இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## வெளிநாட்டு தூதுவர் மத்தியில் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா

[கொழும்பு]

வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு மிக விரைவில் தீர்வுகாணப்படவுள்ளதாகவும் இது தொடர்பாக சகல நடவடிக்கைகளையும் தான் துரிதப்படுத்தியுள்ளதாகவும் சிறிலங்காவின் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா தெரிவித்துள்ளார்.

ஜனாதிப்தியாக பதவிப்பிரமாணம் செய்துகொண்டபின் முதல் தடவையாக இலங்கையில் உள்ள சகல உயர் ஸ்தானிகர்களுக்கும் டி. பி. விஜயதுங்கா விருந்துபசாரம் ஒன்றை வழங்கினார். இதன்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் ஜனாதிபதி மேலும் உரை நிகழ்த்துகையில் நாடுபூராவும் சமாதானம் நிலவவேண்டும் என்பதையே நாம் விரும்புகிறோம். இதற்காக அனைவரும் முழுமனதுடன் பிரார்த்திக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

மேலும் வடக்கு கிழக்கு பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட்டதும் அப்பகுதிகள் துரிதமாக புனரமைப்பு செய்யப்படவுள்ளன என்றும் இதற்கு தேவையான நிதியுதவியை உலக மக்களிடமிருந்து தான் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

புலிகளின் காவலிலுள்ள பொலிஸாரின்

## உண்ணாவிரதம் குறித்து அரச தரப்பு மௌனம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளால் சிறைபிடிக்கப்பட்ட 38 பொலிஸாரும், இராணுவச் சிப்பாயும் தாம் எதிர்வரும் 13ஆம் திகதி முதல் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக சிறிலங்கா அரசிற்கு அறிவித்த போதிலும் இதுவரை அரச தரப்பிலிருந்து எந்தவித பதிலும் தெரிவிக்கப்படாது அது மௌனமாக இருந்துவருகிறது.

தமது உண்ணாவிரதப் போராட்டம் குறித்து 39 யுத்தக் கைதிகளும் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா, பொலிஸ் மா அதிபர் ஏர்னஸ்ட்பெரேரா மற்றும் சில அமைச்சர்கள், பௌத்த பீடாதிபதிகள் ஆகியோருக்கு அறிவித்திருந்தனர். சகல கைதிகளும் கையொப்ப

(4ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமாவின் இரகசிய புலனாய்வுத்துறை

# விசாரணை நடத்துமாறு எதிர்க்கட்சிகள் கோரிக்கை

## மிரட்டி நிதி வசூல்!

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து கொழும்பில் விடுதிகளில் தங்கியிருக்கும் தமிழர்கள் தற்போது நிதிதிரட்டும் குழுக்களினாலும் மிரட்டப்பட்டு வருகின்றனர்.

திட்டமிட்ட வகையில் ஒரு குழுவொன்று இவ்வாறு விடுதிகளில் தங்கியிருக்கும் தமிழர்களிடம் வந்து தண்ணீர்ப் பந்தல் நிதி, விகாரை திருத்தநிதி தருமாறு வற்புறுத்தி வருகின்றனர்.

இந்தக் கோஷ்டியினர் போலியான ஒரு நிதிவரவு பட்டியல் ஒன்றை தயாரித்து அதில் பெருந்தொகை பண வரவுகளை தாமே எழுதிவிட்டு வந்து தமிழ்மக்களிடம் அந்தத் தொகைக்கு சமமான நிதியை தருமாறு வற்புறுத்துகின்றனராம்.

கள் நடத்திய தாக்குதலில் படையினருக்கும் புளொட் குழுவினருக்கும் பெரும்சேதம் ஏற்பட்டது தெரிந்ததே.

இதனிடையே நேற்று நொச்சிமோட்டை பகுதியில் படையினர் பொதுமக்கள் நடமாட்டத்தடை விதித்தாக பி.பி.ஸி. தெரிவித்தது. இப்பகுதியில் இடையிடையே துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டவண்ணமிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

யான நாணயக்குற்றி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வெளியிடப்படவுள்ளது. வெள்ளியிலான இந்த நாணயம் மகிந்தர் இலங்கைக்கு வந்த 23ஆம் நூற்றாண்டையொட்டி வெளியிடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### தப்பியோடியவர் சரண்

மேலூர் இலங்கை அகதிகளுக்கான முகாமில் தங்கியிருந்து தப்பிப்போன இலங்கைத் தமிழரான யோகராஜ் நேற்று முன்தினம் சென்னையில் காவல் துறையினரிடம் சரண் அடைந்துள்ளார். இவர் ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பை சேர்ந்தவர் என்றும், தற்சமயம் புழல் அகதி முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் காவல் துறை வட்டாரங்கள் கூறியுள்ளன.

பதி மேலும் உரை நிகழ்த்துகையில் நாடுபூராவும் சமாதானம் நிலவவேண்டும் என்பதையே நாம் விரும்புகிறோம். இதற்காக அனைவரும் முழுமனதுடன் பிரார்த்திக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

மேலும் வடக்கு கிழக்கு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளால் சிறைபிடிக்கப்பட்ட 38 பொலிஸாரும், இராணுவச் சிப்பாயும் தாம் எதிர்வரும் 13ஆம் திகதி முதல் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக சிறிலங்கா அரசிற்கு அறிவித்த போதிலும் இதுவரை அரச தரப்பிலிருந்து எந்தவித பதிலும் தெரிவிக்கப்படாது அது மௌனமாக இருந்து வருகிறது.

தமது உண்ணாவிரதப் போராட்டம் குறித்து 39 யுத்தக் கைதிகளும் ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கா, பொலிஸ் மா அதிபர் ஏர்னஸ்ட்பெரேரா மற்றும் சில அமைச்சர்கள், பௌத்த பீடாதிபதிகள் ஆகியோருக்கு அறிவித்திருந்தனர். சகல கைதிகளும் கையொப்ப

(4ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் இளைஞர்களைத்தேடி கொழும்பில் தீவிர வேட்டை

## வெளியேறுவதைத் தடுக்கவும் முயற்சி

(கொழும்பு)

கொழும்பில் பாரிய தேடுதல் வேட்டை ஆரம்பமானதைத் தொடர்ந்து கொழும்பு நகரத்தைவிட்டு தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் வெளியேறாது இருக்க பலத்த பொலிஸ் காவல் போடப்பட்டுள்ளதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பொலிசாரின் இத் தேடுதலில் சிக்காது கொழும்பை விட்டு தப்பியோடி ஏனைய பகுதிகளில் தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் மறைந்து கொள்ளலாம் எனக் கருதியே கொழும்பு நகரத்தைச் சுற்றிப் பலத்த பொலிஸ் காவல் போடப்பட்டிருப்பதாகவும், மேலும் வெளிநாடுகளுக்கு நிரந்தரமாகவோ தற்காலிகமாகவோ தப்பியோடாது இருக்க கட்டுநாயகா சர்வதேச விமான நிலையப் பகுதியில் விசேட பொலிஸ் கண்காணிப்பு குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

### அடையாள அட்டை இல்லாதோர் கைது

தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் எந்தத் தரத்தினராயிருந்தாலும் அவர்களைக் கைதுசெய்து விசாரணைக்குட்படுத்த வேண்டுமென்று பொலிஸ் திணைக்களம் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் உத்தரவு பிறப்பித்துள்ளது. தேசிய அடையாள அட்டைக்குப் பதில் அதன் போட்டோ பிரதியை உரிய அடையாள அட்டையாகக் கருதக்கூடாது என்றும் இந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

### பதிவு செய்தோரும் கைது

பொலிஸ் தலைமையகம் விடுத்த உத்தரவை அடுத்து கடந்த புதன்கிழமை இரவு மட்டும் 500 தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் மொரட்டுவை, இரத்மலானை, கல்கிசை, தெஹிவளை வத்தளை, கந்தானை, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, கொள்ளுப்பிட்டி பகுதிகளில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## புலனாய்வுத்துறை சிபார்சு கிடைத்தாலே விடுதலை

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கைது செய்யப்படும் வடக்கு-கிழக்கு மற்றும் மலையக இளைஞர்கள், யுவதிகளை புலனாய்வு பணியகத்தின் சிபாரிசுக்கு அமையவே விடுதலை செய்யப்படுவர் என சிறிலங்கா பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அண்மைக்காலமாக பெருமளவு தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் இரவு பகலாக விசேட பொலிஸ் குழுவினரால் கைது செய்யப்படுவது தெரிந்ததே.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இறந்த கடற்பன்றி சந்தையில் விற்பனையானது

[யாழ்ப்பாணம்]

கடலில் மிதந்துவந்த இறந்த கடற்பன்றி ஒன்றை நேற்று முன்தினம் காலை மீனவர்கள் சிலர் எடுத்துவந்து 11,000 ரூபாவுக்கு விற்றுள்ளனர். இப்பன்றியை பாசையூர் சந்தையிலும், குருநகர் சந்தையிலும் கிலோ 120 ரூபாவாக விற்றதாக தெரியவருகின்றது.

மேற்படி கடற்பன்றி இறைச்சி பாசையூர்சந்தையில் 9.00 மணி தொடக்கம் 11.00 மணிவரை விற்பனையாகியுள்ளது. ஆனால் குருநகர் சந்தையில் இதை விற்க முனைந்த போது அதிலிருந்து எழுந்த துர்நாற்றத்தை அவதானித்த நுகர்வோர் சிலர் யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரியின் பணிமனைக்கு சென்று புகார் செய்ததை அடுத்து ஸ்தலத்துக்கு சென்ற உணவுக்கட்டுப்பாட்டு பரிசோதகர் அப்பன்றி இறைச்சி உணவுக்காக பயன்படுத்த இயலாத அளவிற்கு பழுதடைந்துள்ளதை கண்டு உடனடியாக அவற்றை கைப்பற்றி புதைத்ததாக சுகாதார வைத்திய அதிகாரியின் பணிமனையில் தெரிவிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க இந்த கடற்பன்றி பற்றி மீனவர் ஒருவரிடம் விசாரித்த போது

(4ஆம் பக்கம் பார்க்க)

## புதிய நியமனம்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைத் திட்டமிடல் செயலாளராக கேணல் அனுரத்த ரத்வத்தை நியமிக்கப்பட்டுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மாகாணசபைத் தேர்தல் முடிவுகளை ஆராயும் பொருட்டும் இத் தேர்தல் காலங்களில் கட்சி உறுப்பினர்கள் நடந்து கொண்ட விதம் குறித்து ஆராய்ந்து எதிர்காலத்தில் கட்சியின் செயற்திட்டம் ஒன்றை வகுத்துக் கொள்வது தொடர்பான அறிக்கையை மூன்று வாரங்களில் இவர் சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கப்படுவதாக கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

இவரின் இந்நியமனத்திற்குச் சுதந்திரக்கட்சிக்குள்ளேபலத்த எதிர்ப்புள்ளதாகவும் ஹெல உறுமய உறுப்பினர்களிடையே இது குறித்து அதிருப்தி நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் நம்பிக்கைக்குப் பாத்திரமான இவரின் திட்டம் மூலம் கட்சியிலிருந்து சிலர் வெளியேற்றப்படக்கூடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழர் விடுதலைப்படை தலைவர் சுட்டுக்கொலை

### குளத்தூரில் சம்பவம்

[சென்னை]

தமிழர் விடுதலைப்படை எனும் தமிழ் நாட்டிலுள்ள தீவிரவாத அமைப்பின் தலைவர் எனக் கூறப்படும் நாகராஜன் நேற்று பொலிசாரால சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் தமிழகத்தில் நடைபெற்ற பல குண்டு வெடிப்பு மற்றும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக தேடப்பட்டு வந்தவர் என கூறப்படுகிறது.

நேற்று காலை திண்டுக்கல் அண்ணா மாவட்டம் குளத்தூரில் நாகராஜன் நடமாட்டம் குறித்து கிடைத்த தகவலை அடுத்து அந்த பொலிஸார் விரைந்தனர். அப்போது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமாவின் இரகசிய புலனாய்வுத்துறை

# விசாரணை நடத்துமாறு எதிர்க்கட்சிகள் கோரிக்கை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவினால் செயற்படுத்தப்பட்டுவந்த இரகசியப் புலனாய்வுத்துறையினர் தொடர்பாகவும் அதன் உறுப்பினர்களின் நடத்தை தொடர்பாகவும் விசாரணை நடத்த பூரண அதிகாரம் கொண்ட விசாரணைக்குழு ஒன்றை நியமிக்குமாறு கொழும்பு மாவட்ட சுதந்திரக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபால டி சில்வா ஜனாதிபதி டி.பி. விஜயதுங்காவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரியொருவரின் தலைமையின்கீழ் இக்குழுவை வைத்திருந்தமையும் தற்போதைய ஜனாதிபதி விஜயதுங்கா கலைத்தமையும் தெரிந்ததே.

எந்த ஒரு நாட்டிலும் சட்டபூர்வமான ஒரு ஜனாதிபதி சட்டபூர்வமற்ற ஒரு புலனாய்வுத்துறையை வைத்திருந்ததில்லை எனவும், சட்டபூர்வமான பொலிஸ் புலனாய்வுத்துறை, இராணுவப் புலனாய்வுத்துறை எனபன இருக்கும்போது தமக்கு எதிரானவர்கள் குறித்து தகவல் அறிய பிரேமதாசா குழுஒன்றை வைத்திருந்தமையை ஏற்க முடியாது என நிமால் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்தார்.

எனவே இப்புலனாய்வுத்துறையின் முழு நடவடிக்கைகள் பற்றியும் பூரண விசாரணை நடத்தக்கூடிய அதிகாரம் கொண்ட விசாரணைக் குழு ஒன்றை உடனடியாக நியமித்து பொதுமக்கள் உண்மையை அறிய ஜனாதிபதி ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார்.

## ஹெல உறுமயவுக்கு எதிராக சுதந்திரக்கட்சி விசாரணை

(கொழும்பு)

சுதந்திரக்கட்சிக்குள் உள்ள ஹெல உறுமய குழுவினருக்கு எதிராக விசாரணை நடைபெற்று வருவதாக ராவய பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்தார். இதனால் இவ்விசாரணையை எதிர்த்து ஹெல உறுமய உறுப்பினர் திலக்கருண ரட்ண நீதிமன்றத்தில் வழக்கு தாக்குதல் செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஹெல உறுமய உறுப்பினர் திலக்கருண ரட்ணவுக்கு எதிராக சுதந்திரக்கட்சி உள்ளக விசாரணை ஒன்றை மேற்கொண்டு வருவதாகவும் இருமுறை இவர் விசாரணைக்கு அழைக்கப்பட்டபோதும் விசாரணைக் குழுமுன் சமுகமளிக்க தவறிவிட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நாளை இறுதித் தடவையாக அழைக்கப்பட்டுள்ளார். இவ் விசாரணையின் போதும் அவர் சமுகமளிக்கத் தவறின் கட்சி தன்னிச்சையாக முடிவெடுக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந் நிலையில் கட்சி தன்மீது எடுத்திருக்கும் இந் நடவடிக்கைக்கு எதிராகவே திலக்கருணரட்ண நீதிமன்றத்தில் வழக்கு தாக்குதல் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மீனவர் மீது தாக்குதல் கடற்படை அட்டகாசம்

### உபகரணங்கள் கடலில் வீசப்பட்டன

(வடமராட்சி)

சிறிலங்கா கடற்படையினர் வடமராட்சி கடல்பரப்பில் மீனவர் படகுகள் மீது தாக்குதலை மேற்கொண்டதுடன் பலலட்ச ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்களையும் கடலில் வீசினர்.

நேற்றுமுன்தினம்பகல் 12.00 மணியளவில் பருத்தித்துறை முனைக் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீதே கடற்படையினர் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலினால் பலாலியைச் சேர்ந்த தங்கவேலு யேசுதாஸ் என்பவர் படுகாயமடைந்தார். இவருடன் சென்ற சின்னவன், அப்பையா ஆகியோரும் காயமடைந்தனர்.

இதேவேளை நேற்று முன்தினம் காலை 6.00 மணியளவில் மீன்பிடிப்பதற்காக நான்கு படகுகளில் 12 பேர் சென்று கொண்டிருந்த போது திடீரென எதிர்ப்பட்ட கடற்படையினர் அவர்களை சுற்றி

(4ஆம் பக்கம் பார்க்க)

## இப்படியும் நடக்கிறது

[தென்மராட்சி]

விறகு வியாபாரி ஒருவரின் சைக்கிளில் இருந்த இரு சில்லுக்களும் இனம் தெரியாத நபர்களால் வீதியில் களவாடப்பட்டுள்ளன.

சென்ற கிழமை கொடிகாமம் கச்சாய் வீதியில் விறகு வியாபாரி ஒருவர் தனது சைக்கிளில் கொண்டு வந்த விறகுடன் சைக்கிளை வீதி அருகில் விட்டுவிட்டு ஒரு நிழலில் இளைப்பாறுவதற்காக சுமார் ஒரு மணி நேரம் நிழலில் நித்திரை செய்துவிட்டு பின்பு வந்து சைக்கிளைப் பார்த்தபோது சைக்கிள் விழுந்து கிடந்தது ஆனால் சைக்கிளில் இருந்த இரு சில்லுக்களும் மாயமாக மறைந்துவிட்டன.

[86]

## வரி விளம்பரம்

### சந்தணமேடை

சந்தணமேடை சண்முகலிங்சன் கவிதைகள். என் சண்முகலிங்கன், சமூகவியல் சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாண பல்கலைக்கழகம். விலை ரூபா 75/- விற்பனையாளர்கள்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-6734)

### S.L A S.

யூலை 93இல் நடைபெறவிருக்கும் பரீட்சைக்கான துரித பயிற்சி வகுப்புகள் புதன், வெள்ளி நாட்களில் ஆரம்பம் 02. 06. 93, 3 00 மணி முழுக் கட்டணம் 300/- School of Business Administration 16, 3rd Cross St Jaffna (சி-6728)

### உதிரிப்பாகங்களுக்காக சகல மணிக்கூடுகள் றேடியோக்கள்

நல்ல நிலையில் உள்ள எலக்ரோனிக், ஒட்டோமற்றிக், வைண்டிங் சுவர், மேசை மணிக்கூடுகள் றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ். 284, ஆரியகுளம் சந்தி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி/6633)

### கொழும்பு ஸ்ரூடியோ

நினைவஞ்சலி, சரமகவிக்குத் தேவையான (Blocks) பழைய படங்களில் இருந்து அந்தியேட்டிக்குத் தேவையான புகைப்படங்கள், உறுதியான றபர்சீல் - ஸ்ரிக்கேஸ் தேவைப்படும் போது எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்: கொழும்பு ஸ்ரூடியோ 55, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி-6747)

### பொதுக் கூட்டம்

தொண்டர் பயிலுநர் ஆசிரியர் சங்கத்தின் முதலாவது பொதுக்கூட்டம் எதிர் வரும் (04 06-93) வெள்ளிக் கிழமை காலை 10 00மணிக்கு யாழ். பட்டப்படிப்புக் கல்லூரியில் நடைபெறும். இதில் சகல தொண்டர், பயிலுநர்களும் கலந்து கொள்ளுமாறு சங்கம் அறிவித்துள்ளது.

### தென்னம்பிள்ளை விற்பனை

தொல்புரம் கமநல சேவை நிலையத்தினரால் நாற்றுப் போட்ட நல்லினத் தென்னம் பிள்ளைகள் அவ்வூர் விவசாயிகளுக்கும், தென்னை உற்பத்தியாளர்களுக்கும் விற்பனை

# மங்கல மண வாழ்த்துக்கள்



**மணமகன் :-**

திருவளர் செல்வன்

**ம. பாலசச்சிதானந்தஈஸ்வரன் (ரவி)**



**மணமகள் :-**

திருவளர் செல்வி

**ந. ஆனந்தராஜினி**

**மங்கல மண நாள்:- 2.6.93 புதன் பி.ப. 3.30-6.00 வரை**

## அமுதத் தமிழ்போல் அருள்கூடி வாழ்க!

பாலசச்சி தானந்த ஈஸ்வரனாம் பகலவனும்
பாரேத்து மானந்த ஆனந்த ராஜினியாம் பண்பினளும்
கோலமுறக் கூடியின்ப இல்லறத்தி னினிமையுற்று
கொஞ்சுபுகழ் மிஞ்சுமறம் தழைத்தோங்க
ஞாலமதில் நாடுபவை யாவையுமே கைகூடி
நல்லமுதத் தமிழ்போல் அருள்கூடி
சீலமுடன் பல்லாண்டு பல்லாண்டு வாழ்கவெனச்
சிந்தைநிறை வாழ்த்துக்கள் ஈகின்றோம்.

★ ★ ★

"பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரம் ஆண்டு
தம்பதியர் வாழியவே இல்லறங் கண்டு."

எழிலுற வாழ்த்துவோர்:

திருமதி பொன்னுத்துரை குடும்பத்தினர்
திருமதி இராஜரட்ணம் குடும்பத்தினர்
திரு. கமலானந்தன் குடும்பத்தினர்
திரு. திருமதி இராசலிங்கம்
திரு. இராசேந்திரம் குடும்பத்தினர்
திரு. இராஜகுமார் குடும்பத்தினர்

கொடிகாமம்
2-06-93

(சி-6735)

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

### பொதுக்கூட்டம்

இடம்: புதிய விஞ்ஞான கல்விக் கழகம் (எழிலகம் முன்பாக)

காலம்: 04-06-93 (வெள்ளி) காலை 10 மணி.

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்று காலை 9 மணிக்கு பொது நிர்வாக சபைக் கூட்டமும்

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



# நாவலர்

## கல்விக் கழகம்

நாவலர் வீதி, ஆனைப்பந்தி.

### ஆண்டு - 5

[புலமைப் பரிசில் பரீட்சை – 93]

### துரித வினாவிடை வகுப்பு

ஆரம்பம்: 05-06-1993 (சனி.காலை - 8.30மணி)

- கடந்த கால புலமைப் பரிசில் பரீட்சை வினாக்களும், மாதிரிப் பரீட்சை வினாக்களும் கற்பிக்கப்படும்.
- ஒவ்வொரு வாரமும் குறைந்த கட்டணத்தில் மாதிரிப் பரீட்சை நடாத்தப்படும்.

(சி-6725)

### தரமுள்ள வடிவமைப்பு/ ஓவியம் சேவை

★ சர்வதேச தரத்திற்கேற்ற ஓவிய / வடிவமைப்பு (ART/ GRAPHIC DESIGN) குறித்த நேரத்திற்கு பூர்த்தி செய்து கொடுக்கப்படும்.

★ உங்கள் கழகம்/ நிறுவனத்தின் சின்னங்கள் (LOGO/ TRADE MARK) நூல்களுக்கு "கார்ட்டூன்" (CARTOON) ஓவியங்கள், வீடியோ படங்களுக்கு தலைப்புக்கள் (TITLES), 'லேபல்கள்" மற்றும் விளம்பரங்கள் எல்லாம் ஒரே இடத்திலேயே பெற்றுக்கொள்ளுங்கள் !

★ ஆரம்ப ஓவியம் (SKETCH) தொடக்கம். 'புளொக்" "றப்பர் சீல்" செய்வதற்கான படம் வரை (FINAL ARTWORK ) இங்கு செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு:-

**ந. செந்தில்குமரன்**

"சரஸ்வதி வாசம்", அரசடி ஒழுங்கை, தாவடி.

(5016)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி **விருத்தாசலம் சிவகாமிப்பிள்ளை**

பிறப்பு:- 1928. 12. 15

இறப்பு:- 1992. 6. 12

திதி: 1993. 06. 2

அன்புத்தாயே! உந்தனுக்கு இந்த நிலை
வரும் என்று நாங்கள் கனவில் கூட
எண்ணவில்லை என்றாலும் நீங்கள்
இறைவனுடன் சேர்ந்து விட்டீர்கள்
நாங்கள் தான் பூமியில் உங்கள்
பிரிவால் தவிக்கின்றோம் ஓராண்டு
என்ன பல்லாண்டு சென்றாலும்
உங்கள் நினைவு மாறாது.

உங்கள் பிரிவால் வாடும்

பாணம். (சி-6747)

## பொதுக் கூட்டம்

தொண்டர் பயிலுநர் ஆசிரியர் சங்கத்தின் முதலாவது பொதுக்கூட்டம் எதிர் வரும் (04 06-93) வெள்ளிக் கிழமை காலை 10 00மணிக்கு யாழ். பட்டப்படிப்புக் கல்லூரியில் நடைபெறும். இதில் சகல தொண்டர், பயிலுநர்களும் கலந்து கொள்ளுமாறு சங்கம் அறிவித்துள்ளது.

## தென்னம்பிள்ளை விற்பனை

தொல்புரம் கமநல சேவை நிலையத்தினரால் நாற்றுப் போட்ட நல்லினத் தென்னம் பிள்ளைகள் அவ்வூர் விவசாயிகளுக்கும், தென்னை உற்பத்தியாளர்களுக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

(41)


**BECON**

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**A/L 95**

கலை, வர்த்தகம்
புதிய பிரிவு
ஆரம்பம்: 5-6-93
சனி 7-00 a. m.
பழமையான ஆசிரியர் குழு.

(சி-6693)



ஜோ. எகட்டனின்
ஜெசித்தாராவின்

**உலாவுப் பார்சல்கள்**

காலை 11.30 மணி முதல்
பகல் 3.00 மணி வரை
கிடைக்கும்.

மீன் / இறைச்சி
ரூபா 30/-
மரக்கறி ரூபா25/-

மாணவர்களுக்கு
விசேட சலுகை
எல்லாவிதமான
உணவு ஓடர்களும்
கவனிக்கப்படும்.

**ஜெசித்தாரா**

சுண்டுக்குளிமகளிர் கல்லூரி
முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி
[சி-6718]


திரு. கமலானந்தன் குடும்பத்தினர்
திரு. திருமதி ராசலிங்கம்
திரு. இராசேந்திரம் குடும்பத்தினர்
திரு. இராஜகுமார் குடும்பத்தினர்

(சி-6735)

கொடிகாமம்
2-06-93

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

## பொதுக்கூட்டம்

இடம்: புதிய விஞ்ஞான கல்விக் கழகம்
(எழிலகம் முன்பாக)

காலம்: 04-06-93 (வெள்ளி) காலை 10 மணி.

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்று காலை 9 மணிக்கு பொது நிர்வாக சபைக் கூட்டமும் நடைபெறும். நிர்வாக சபை உறுப்பினர்கள் அனைவரும் 9 மணிக்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(சி-6731) பொதுச் செயலாளர்.

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
17-05-1930

மறைவு
02-06-1988

### சி.வி.மா. தில்லையம்பலம் தேவதாசன்

(டாக்டர் தேவதாசன்)
அராலி

அன்புடன் எமை வளர்த்து
அறிவூட்டி, நெறிகாட்டி நாம்
இன்புற்றிருக்க நீர் எம்மை
விட்டுப் பிரிந்தீரோ! எண்ணி
எண்ணி மனம் கவல்கின்றோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி:- திருமதி சிவானுகூலம் தேவதாசன்(தாதி)
பிள்ளைகள் :-
திரு சிவதாஸ் (London), உமாதாசன் (London), மதிதாசன் (London), சிறிகரதாசன் (London), இலம்போதரன் (London) மற்றும் மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

தே. உமாதாசன்,
30 1, 3-ம் ஒழுங்கை, கண்டிவீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
60, Montague Road,
Hanwell W 7, London. U.K. (5012)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



தமிழீழ விடுதலைப் புலிகளின்
வடமராட்சி அரசியல் பிரிவுப் பொறுப்பாளரும்,
வடமராட்சி பதில் பொறுப்பாளருமான

### மேஜர் சலாம் அவர்கள்

[வ. சி. நல்லராசன் (பழம்) இமையாணன்]

தமிழ்த்தாய் கரங்களில்: 17-09-1956
தமிழர்தம் மனங்களில்: 02-06-1988

மாறாத பாசத்திற்குரியவனே!
விடுதலை என்பது, கடையிலே வாங்கும் பொருளல்ல என்றாய்!

ஈகங்களும், பெரும் அர்ப்பணிப்புகளும்
நிறைந்திட வேண்டும், அதற்கு என்றாய்
மக்களே மகத்தான சக்தியுமென்றாய்
மக்களின் மனங்களில் நீக்கமின்றி நிறைந்தாய்.
வற்றாத கண்ணீர்வெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்ந்தது
வாடிய பயிராய்க் கிடந்தனர் மக்கள், உன் வீரச்சாவு கேட்டு...
இன்று ஐந்தாவது ஆண்டிலும் அதே நிலை உண்டு.
காலங்கள் நீளும், உன் கோலங்களும் நின்று வாழும்...

தமிழ் வளர் சோலை
இமையாணன்,
உடுப்பிட்டி.

குடும்பத்தினர்

(5011)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி **விருத்தாசலம் சிவகாமிப்பிள்ளை**

பிறப்பு:- 1928. 12. 15
இறப்பு:- 1992. 6. 12
திதி: 1993. 06. 2

அன்புத்தாயே! உந்தனுக்கு இந்த நிலை
வரும் என்று நாங்கள் கனவில் கூட
எண்ணவில்லை என்றாலும் நீங்கள்
இறைவனுடன் சேர்ந்து விட்டீர்கள்
நாங்கள் தான் பூமியில் உங்கள்
பிரிவால் தவிக்கின்றோம் ஓராண்டு
என்ன பல்லாண்டு சென்றாலும்
உங்கள் நினைவு மாறாது.

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

வேலணை மேற்கு,
வேலணை.

(5017)

## நினைவு கூருகின்றோம் ... 1993-06-02

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னம்பிட்டியில் சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல்போன 34 தமிழர்கள்.

1986ஆம் ஆண்டு மட்டு நகரில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

சுட்டுக் கொல்லப்பட்ட பின் மட்டு - கிரான் ஆற்றில் வீசப்பட்ட 3 தமிழர்கள்.

திருமலை - செல்வநாயகபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 12தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு வடமராட்சிப் பகுதியில் எட்டாவது நாளாக சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட ஒப்பறேசன் லிபறேசன் நடவடிக்கையின்போது படுகொலை செய்யப்பட்ட 15 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு அம்பாறை - காரைதீவுப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் கொலைசெய்யப்பட்டு எமைடபிரிந்த-

மகேஸ் (பாலகிருஷ்ணன் மகேஸ்வரன் - கோட்டைக் கல்லாறு - மட்டு )

வல்வெட்டித்துறை வேம்படிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-
வடமராட்சிப் பொறுப்பாளர்-

மேஜர் சலாம (சின்னக்குட்டி நல்லராசன் (பழம்)- தமிழ்வளர்சோலை, இமையாணன், உடுப்பிட்டி - யாழ். )

1991ஆம் ஆண்டு கிளி - ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

வினோ (பூரணவேலுப்பிள்ளை தனராஜ் - தனிப் பனைக்குடியேற்றம் வல்வெட்டித்துறை)

மட்டு - பெரியபோரதீவுப் பகுதியைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள கூழாங்குளம் பகுதியிலுள்ள தமது வீட்டைப் பார்வையிடச் சென்று காணாமல்போன தந்தை, பத்து வயது மகன் மற்றும் கூடச்சென்ற இளைஞன் உட்பட 3 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6732)

## சிந்தனைக்கு

அறிவுரையால் ஒருவன் பெறும் நன்மையைவிட அவனுக்கு அச்சமூட்டிச் சலசலக்கச் செய்யும் ஒரு நிகழ்ச்சியால் அதிகம் நன்மை உண்டாகும்.
- எட்கார் வாட்ஸன் ஹோவ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 02-06-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## இன்றாவது புரியுமா?

இனப்பிரச்சினையின் தீர்விற்கென இந்திய – இலங்கை சமாதான உடன்படிக்கையின் மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளிடம் அதிகாரம் எவையும் இல்லை. அவற்றிற்கு வழங்கப்பட்டிருக்கும் அற்ப சொற்ப அதிகாரங்களையும் விரும்பிய நேரத்தில் மத்திய அரசு பறித்துக் கொள்ள முடியும். இவ்வாறு இம்மாகாண சபைகள் உருவாக்கப்பட்டபோது விடுதலைப் புலிகள் கூறிய குறித்துப் பல விமர்சனங்கள் எழுந்தன.

மாகாண சபைத் திட்டத்தில் அதிகாரங்கள் நிறைந்திருப்பதாக சில தமிழ்க் குழுக்கள் தெரிவித்தன. இதைப் பரீட்சார்த்தமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் எனச் சிலர் வாதிட்டனர். இதேவேளை மாகாண சபைத் திட்டம் தமிழருக்கு இலங்கையின் ஒருபகுதியையே தாரைவார்த்து விட்டதாக சிங்கள எதிர்க்கட்சிகள் ஒப்பாரி வைத்தன.

ஆனால், விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டில் இருந்து மாறவில்லை. இது பரீட்சிப்பதற்கோ, அன்றி விட்டுக் கொடுப்பிற்கோ உரிய விடயம் அல்ல என்பதில் அவர்கள் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். அதிகாரமற்ற சபை ஒன்றிற்காக, தனது நலனை மட்டுமே சிந்திக்கும் இந்தியாவை நம்பி, தமிழ்மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கக் கூடிய ஒரே அம்சமான ஆயுதத்தைக் கைவிட அவர்கள் தயாராக இருக்கவில்லை.

புலிகள் அன்று கூறியதை சிங்கள எதிர்க் கட்சிகள் இன்று உணர்கின்றன. அன்று மாகாண சபைத்திட்டம் தமிழருக்கு இலங்கையின் ஒரு பகுதியைத் தாரைவார்த்து விட்டதாகக் கூக்குரல் இட்ட அதே சிங்கள எதிர்க் கட்சிகள் தற்பொழுது மாகாண சபைகளிடம் அதிகாரம் எதுவுமற்ற ஓர் ஏமாற்றுத்திட்டம் எனவும், அவற்றின் அதிகாரங்களை மத்திய அரசு விழுங்கி விட்டதாகவும் கூக்குரல் வைக்கின்றன.

இது குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சட்டத்தரணியான நிமால் சிறிபால சில்வா ''மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டதாக கூறப்படும் பல்வேறு அதிகாரங்களையும் மத்திய அர

# புலிகளுடன் பேச்சு நடத்துக அரசாங்கத்திடம் வலியுறுத்து

### சர்வதேச தொழிற்சங்க சம்மேளனம் தீர்மானம்

[புருசல்ஸ்]

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் முன்வைத்த இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தின் அடிப்படையில் சமாதானத்துக்கான பேச்சுவார்த்தையை உடனடியாக ஆரம்பிக்கும்படி சர்வதேச சுதந்திர தொழிற் சங்கங்களின் சம்மேளனம் சிறிலங்கா அரசைக் கேட்டுள்ளது,

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை எட்டும் வகையில் சர்வதேச சமூகம் சிறிலங்கா அரசுக்கு அழுத்தம் தர வேண்டும் என்று கோரும் தீர்மானம் புருசல்சில் கூடிய மேற்படி சம்மேளனத்தின் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

92 நாடுகளைச் சேர்ந்த 135 தொழிற் சங்கங்கள் இந்தச் சம்மேளனத்தில் இணைந்துள்ளன. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும், இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கமும் இச்சம்மேளனத்தில் அங்கத்துவம் வகிக்கின்றன.

ரோக்கியோவில் கடந்த வருடம் நடந்த மேற்படி சம்மேளனத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்திய மாநாட்டில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் பிரதிநிதி என். விஜயசிங்கம் இலங்கை இனப்பிரச்சினை பற்றிக் கருத்து வெளியிட்டதைத் தொடர்ந்தே இத்தீர்மானம் சம்மேளனத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் தொழிற்சங்கங்கள் தத்தம் அரசுகளிடம் இத்தீர்மானத்தின் வாசகங்கள் பற்றி எடுத்துக் கூறி உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரப்பட்டுள்ளது. அத்துடன் இராணுவத் தீர்வை எட்டுவதற்கு சிறிலங்கா அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவு காட்டாமல், சமாதானத் தீர்வுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் சர்வதேச சுதந்திர தொழிற்சங்கங்களின் சம்மேளனம் சர்வதேச சமூகத்தை வலியுறுத்தியுள்ளது.

சிறிலங்காவில் சமூக - பொருளாதார அபிவிருத்திக்கு குறிப்பாகத் தொழிலாளர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பயன்படுத்த வேண்டிய பணத்தைச் சிறிலங்கா அரசு ஆயுதக் கொள்வனவு செய்வதில் விரயமாக்குவது குறித்தும் சம்மேளனத்தின் செயற்குழு அதன் கூட்டத்தில் கவலை தெரிவித்துள்ளது. அத்துடன், இராணுவத் தீர்வில் நம்பிக்கையுள்ள சில தொடர்புச் சாதனங்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் குழப்புவது குறித்தும் சம்மேளனம் கண்டித்திருப்பதோடு, சிறிலங்காவின் இனப்பிரச்சினையின் போக்குக் குறித்து உன்னிப்பாக அவதானித்து, தேவை ஏற்படும்போது உரிய நடவடிக்கை எடுக்கும் வகையில் செயற்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் தொழிற்சங்கங்களைச் செயற்குழு கேட்டுள்ளது.

# பத்திரிகையாளர் ஆவதை ஆரம்பத்தில் விரும்பினேன்

### பிரதமர் ரணில்

(கொழும்பு)

'லேக் ஹவுஸ் பத்திரிகைநிறுவனம் தேசிய மயமாக்கப்பட்டிருக்காவிட்டால், நான் ஒரு பத்திரிகையாளராகவே இருந்திருப்பேன். எனவே என்னை இப்பதவிக்கு நான் உயர்ந்தமைக்கு திருமதி சிறிமாவோவும் ஒரு வகையில் காரணமாகியுள்ளார்.'

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏ. எப். பி. செய்தித் தாபனத்திற்கு வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

1972-ம் ஆண்டில் சட்டத் துறையில் பட்டம் பெற்றுக் கொண்ட தான், தமது குடும்பப் பத்திரிகை நிறுவனமான லேக் ஹவுஸ் நிறுவனத்தில் இணைந்து பத்திரிகையாளராக வருவதிலேயே ஆர்வம் கொண்டிருந்ததாகவும், ஆனால் லேக் ஹவுஸ் நிறுவனம் 1973ஆம் ஆண்டில் தேசியமய மாக்கப்பட்டதால்

மேலும் கூறுகையில், பிரதமர் பதவிக்கு தெரிவு செய்யப்படுவேன் என்று ஒரு போதும் எண்ணியிருக்கவில்லை என்றும், அதற்கான திட்டமெதையும் கொண்டிருக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

அத்துடன் இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட பின்னர் பாதுகாப்புக் காரணங்களுக்காக சுதந்திரமாக நடமாட முடியாத நிலையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

#### தேர்தல் காலத்தில்

## லீவு எடுத்த பொலிசார் தற்காலிக வேலை நீக்கம்

(கொழும்பு)

தேர்தல் காலங்களில் லீவு போட்டு விட்டுச் சென்ற இரு பொலிஸ்காரரர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

நடந்து முடிந்த மாகாண சபை தேர்தலின் போது தேர்தல் கடமையில் ஈடுபட்டதாகச் சொல்லப்பட்ட இரு பொலிஸ்காரரும் திடீர் சுகவீனலீவு போட்டு விட்டு தமக்குரிய இடத்திற்கு செல்லாத இவ் இருவர்மீதும் விசாரணை நடைபெறுவதாகவும், இவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் இரு பொலிஸ்காரரும் மாகோ பொலிஸ்நிலையத்தை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## விவசாயிகளுக்கு உதவ அறிமுக அட்டை விநியோகம்

தற்போதுஅரசினால் தோற்றுவிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையானது விவசாய உள்ளீடுகளின் கிடைப்பனவு, கடன் பெறுவனவு, சந்தைப்படுத்துதல் ஆகியவற்றில் பெரும் பாதிப்பினைக் கொண்டு வந்துள்ளது. இவ்வாறான பாதிப்புக்களிலிருந்து விவசாயிகளை பாதுகாக்கும் நோக்கில் அவர்களுக்கு விவசாய அறிமுக அட்டையினை வழங்குவதற்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் செய்து வருகின்றது.

இதனூடாக உரப்பசளை, எரிபொருள், விதைதானியம், விவசாய உபகரணங்கள் போன்ற விவசாய உள்ளீடுகளும், விவசாயக் கடன்களும் உரிய முறையில் விவசாயிகளைச் சென்றடையும்வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

எனவே விவசாயிகள் அனைவரும் பயன்பெற வேண்டுமாயின் இந்த அறிமுக அட்டையை வைத்திருப்பது அவசியமாகும். ஆகவே இந்த விவசாய அறிமுக அட்டையை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்களை உங்கள் கிராமிய உற்பத்திக் குழு தொடர்பாளர் அலுவலகங்களிலும், கோட்டச் செயலகங்களிலும் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

### விளையாட்டு

அரியாலை அருணோதயா சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற அமரர் சிவரெத்தினம் ஞாபகார்த்த கரபந்தாட்ட சுற்றுப் போட்டியில் காங்கேசன் துறை ஐக்கியகழகஏ அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்தி ஏ அணி இன்று மாலை ஏழு மணியளவில் மின்னொளியில் விளையாடவுள்ளது.

இதேவேளை பிற்பகல் 4-00 மணியளவில் சென் அன்ரனீஸ் ஏ அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய கழகத்தின் ஏ அணி வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் விளையாடவுள்ளது.

### நாய்களுக்கு தடுப்பூசி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகமும், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும் இணைந்து புலோலிப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த்தடுப்பூசிகளை ஏற்றி வருகின்றது இப்பகுதிகளில் நாய் வளர்ப்பாளர்கள் தமது நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்ற விரும்பினால் புலோலிப்பகுதி சுகாதாரப் பரிசோதகருடன் அல்லது கால்நடை வைத்திய அதிகாரியுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் நடமாடும் கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கான நடவடிக்கைகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (25)

## தனியார் பாதுகாப்பு சேவை பொலிஸ் விசாரணையில்

(கொழும்பு)

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தனியார் பாதுகாப்புச் சேவை ஒன்றினைப்பற்றிவிசாரணை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத் தனியார் பாதுகாப்புச் சேவையினர்பொது மக்களைச் சட்ட விரோதமாகக் கைது செய்தமை மற்றும் இச்சேவையைநிர்வகித்து வரும் இளைப்பாறிய பொலிஸ் அதிகாரிகள் பணவருவாய் சம்பந்தமாகவும் புலன்விசாரணை மேற்கொள்ளப் படுகின்றது.

தனியார் பாதுகாப்புச் சேவையின் நடவடிக்கைகள், கைது செய்யப்பட்டவர்கள் இதனால்விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பற்றிய தகவல்களையும் புலனாய்வுத் திணைக்களம் பொதுமக்களிடமிருந்து கோரியுள்ளது.

#### பிரேமா கொலை தொடர்பு

## சந்தேக நபர் வங்கி கணக்கு பொலிசாரால் நிறுத்தம்

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா கொலையுண்ட சம்பவத்தின் சூத்திரதாரி எனப் பொலிசாரால் கூறப்படும் குலசிங்கம் வீரகுமார் மற்றும் அவருடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் அனைவரதும் வங்கிக்

காணப்பட்டவர் என்றும் கூறப்படுகிறது. ஜனாதிபதியின் பாதுகாப்பு அதிகாரிகளுடன் 'மச்சான்' போட்டு பழகும் அளவுக்கு குலசிங்கம் வீரகுமார் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்ததாக பொலிசார் கூறி

நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். அதிகார மற்ற சபை ஒன்றிற்காக, தனது நலனை மட்டுமே சிந்திக்கும் இந்தியாவை நம்பி, தமிழ்மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கக் கூடிய ஒரே அம்சமான ஆயுதத்தைக் கைவிட அவர்கள் தயாராக இருக்கவில்லை.

புலிகள் அன்று கூறியதை சிங்கள எதிர்க் கட்சிகள் இன்று உணர்கின்றன. அன்று மாகாண சபைத்திட்டம் தமிழருக்கு இலங்கையின் ஒரு பகுதியைத் தாரைவார்த்து விட்டதாகக் கூக்குரல் இட்ட அதே சிங்கள எதிர்க் கட்சிகள் தற்பொழுது மாகாண சபைகளிடம் அதிகாரம் எதுவுமற்ற ஓர் ஏமாற்றுத்திட்டம் எனவும், அவற்றின் அதிகாரங்களை மத்திய அரசு விழுங்கி விட்டதாகவும் கூக்குரல் வைக்கின்றன.

இது குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சட்டத்தரணியான நிமால் சிறிபால சில்வா ''மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டதாக கூறப்படும் பல்வேறு அதிகாரங்களையும் மத்திய அரசாங்கம் விழுங்கியுள்ளது. அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் தெளிவின்மையாக இருப்பதினாலேயே இது சாத்தியமாகியுள்ளது'' என்கிறார். மேலும், ''மாகாண சபைகளுக்குப் பொலிஸ் அதிகாரமும், பொதுசன வேலை அதிகாரமும் இதுவரை சட்டரீதியாக வழங்கப்படவில்லை'' என்பதோடு மாகாண சபைக்குரிய நிதி ஒதுக்கீட்டு விடயத்திலும் அரசாங்கம் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது என்கிறார்.

அதாவது, மாகாண சபைகள் அமைப்பு ரீதியிலேயே பலவீனமானதோடு, அவற்றின் அதிகாரங்களும் தெளிவாக வரையறுக்கப்படவில்லை. பரவலாக்கப்படும் எனக் கூறிய அதிகாரங்களையும் அரசாங்கம் பகிர்ந்தளிக்க வில்லை. இந்நிலையிலேயே இன்று எதிர்க்கட்சிகள் மாகாண சபைகளின் அதிகாரங்களை மத்திய அரசு விழுங்குவதாகவும், மாகாண சபைகள் செயற்படுவதற்கு அரசாங்கம் முட்டுக் கட்டையாகச் செயற்படுவதாகவும் குற்றம் சாட்டுகின்றன.

அன்று மாகாண சபைத் திட்டம் தனியாக தமிழருக்கான அதிகாரப் பரவலாக்கல் எனக் கருதியமையாலேயே சிங்கள எதிர்க் கட்சிகள் கண்ணை மூடிக் கொண்டு அதை எதிர்த்தன. அன்று பேரினவாத சிந்தனை மட்டுமே அக்கட்சிகள் முன்நின்றது. மாகாண சபைகளை தாம்கைப் பற்றுவோம், அதிகாரம் செலுத்துவோம் என அக்கட்சிகள் எதிர்ப்பார்க்கவில்லை. அவ்வாறு எதிர்பார்த்திருப்பின் அவர்களின் நிலைப்பாடு இவ்வாறு இருந்திருக்குமோ என்பது சந்தேகமே.

இதேவேளை, மாகாணசபைத் திட்டத்தை விடுதலைப்புலிகள் நிராகரித்தது குறித்து கண்டனமும் அபிப்பிராய பேதங்கள் கொண்டவர்களும், அதனைப் பரீட்சித்துப் பார்க்கவில்லை! என குறை கூறியவர்களும் மாகாணசபையின் அவலநிலையை இன்றாவது புரிந்துகொள்ளுதல் நல்லது. இவர்கள் தற்பொழுது மாகாணசபைகள் குறித்து சிங்கள எதிர்க்கட்சிகள் வைக்கும் ஒப்பாரிகளைக் கேட்டாவது விடுதலைப் புலிகளின் முன்னெச்சரிக்கையான நடவடிக்கையைக் கணிப்பீடு செய்துகொள்ளலாம்.

---

வனம் தேசிய மயமாக்கப்பட்டிருக்காவிட்டால், நான் ஒரு பத்திரிகையாளராகவே இருந்திருப்பேன். எனவே என்னை இப்பதவிக்கு நான் உயர்ந்தமைக்கு திருமதி சிறிமாவோவும் ஒரு வகையில் காரணமாகியுள்ளார்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏ. எப். பி. செய்தித் தாபனத்திற்கு வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

1972-ம் ஆண்டில் சட்டத் துறையில் பட்டம் பெற்றுக் கொண்ட தான், தமது குடும்பப் பத்திரிகை நிறுவனமான லேக் ஹவுஸ் நிறுவனத்தில் இணைந்து பத்திரிகையாளராக வருவதிலேயே ஆர்வம் கொண்டிருந்ததாகவும், ஆனால் லேக் ஹவுஸ் நிறுவனம் 1973ஆம் ஆண்டில் தேசியமயமாக்கப்பட்டதால் அரசியலில் ஈடுபட்டு 1977-ம் ஆண்டில் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

## புதிய யோசனை எதுவும் இல்லை

(கொழும்பு)

ஜூன் 10இல் கூடவிருக்கும் பாராளுமன்ற தெரிவுக்குழுவில் புதிதாக எந்த யோசனையும் ஆராயப்படும் அறிகுறி இல்லை என்றும் முன்னைய கூட்டங்களின் தொடர்ச்சியாகவே இது இருக்கும் என்றும் கொழும்பில் அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

## உபகுழு நியமனம்

[கொழும்பு]

மேல் மாகாணத்தில் ஐ.தே.க. தோல்வி கண்டமைக்கான காரணங்களைக் கண்டறிவதற்கான உப குழு ஒன்றை ஜனாதிபதி டி.பி.விஜயதுங்கா நியமித்துள்ளார்.

கடந்த 24ஆம் திகதியன்று ஐ.தே.க. தலைமைச் செயலகமான சிறிகோத்தாவில் நடந்த செயற்குழுக் கூட்டத்தில் இந்த உபகுழு நியமிக்கப்பட்டது.

இந்த தோல்விக்கான காரணங்களை கண்டறிவதிலும், சீர்திருத்தங்களை மேற்கொள்வதிலும் ஜனாதிபதி விஜயதுங்கா பெரும்அக்கறைகொண்டிருப்பதாக கூறப்படுகின்றது. இக் குழுவினர் மாவட்ட மட்டத்தில் கட்சி நிர்வாகிகளைச் சந்தித்து குறைகளை கண்டறியுமுகமான விசாரணைகளை மேற்கொள்ள இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை நகரப் பகுதியில் வாழ்க்கைச் செலவு உயர்ந்தமை எதிர்க்கட்சியினருக்கு வாக்குகள் அதிகரிக்க ஒரு காரணம் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

---

யப்படுவேன் என்று ஒரு போதும் எண்ணியிருக்கவில்லை என்றும், அதற்கான திட்டமெதையும் கொண்டிருக்கவில்லை என்றும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் பாதுகாப்புக் காரணங்களுக்காக சுதந்திரமாக நடமாட முடியாத நிலையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் காலத்தில்

## லீவு எடுத்த பொலிசார் தற்காலிக வேலை நீக்கம்

(கொழும்பு)

தேர்தல் காலங்களில் லீவு போட்டு விட்டுச் சென்ற இரு பொலிஸ்காரர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

நடந்து முடிந்த மாகாண சபை தேர்தலின் போது தேர்தல் கடமையில் ஈடுபட்டதாகச் சொல்லப்பட்ட இரு பொலிஸ்காரரும் திடீர் சுகவீனலீவு போட்டு விட்டு தமக்குரிய இடத்திற்கு செல்லாத இவ் இருவர்மீதும் விசாரணை நடைபெறுவதாகவும், இவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் இரு பொலிஸ்காரரும் மாகோ பொலிஸ்நிலையத்தை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## மரம் தறித்த பொலிசார் மீது விஜயதுங்கா நடவடிக்கை

(கொழும்பு)

நான்கு பொலிஸ் அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

வடமத்திய மாகாணத்தைச் சேர்ந்த பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய சப் இன்ஸ்பெக்டர்கள் மூன்று பேர் உட்பட அப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மீதும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

---

சேவை ஒன்றினைப்பற்றிவிசாரணை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத் தனியார் பாதுகாப்புச் சேவையினர்பொது மக்களைச் சட்டவிரோதமாகக் கைது செய்தமை மற்றும் இச்சேவையைநிர்வகித்து வரும் இளைப்பாறிய பொலிஸ் அதிகாரிகள் தனியார் பாதுகாப்புச் சேவையின் நடவடிக்கைகள், கைது செய்யப்பட்டவர்கள் இதனால்விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பற்றிய தகவல்களையும் புலனாய்வுத் திணைக்களம் பொதுமக்களிடமிருந்து கோரியுள்ளது.

பிரேமா கொலை தொடர்பு

## சந்தேக நபர் வங்கி கணக்கு பொலிசாரால் நிறுத்தம்

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா கொலையுண்ட சம்பவத்தின் சூத்திரதாரி எனப் பொலிசாரால் கூறப்படும் குலசிங்கம் வீரகுமார் மற்றும் அவருடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் அனைவரதும் வங்கிக் கணக்குகளை பொலிசார் இடைநிறுத்தியுள்ளனர்.

மேலும் சந்தேக நபரான குலசிங்கம் வீரகுமார் ஜனாதிபதியின் சிறப்பு பாதுகாப்பு அதிகாரிகளுடன்நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்தவர் என்றும், இதனால் அவர் பாதுகாப்பு அதிகாரிகளின் கட்டுப்பாடுகளைக் கடந்து ஜனாதிபதிக்கு மிக நெருக்கமாக பல சந்தர்ப்பங்களில் காணப்பட்டவர் என்றும் கூறப்படுகிறது. ஜனாதிபதியின் பாதுகாப்பு அதிகாரிகளுடன் 'மச்சான்' போட்டு பழகும் அளவுக்கு குலசிங்கம் வீரகுமார் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்ததாக பொலிசார் கூறியுள்ளனர்.

மேலும் சந்தேக நபரிடம் விலை உயர்ந்த கமெரா ஒன்று இருக்க கண்டுபிடிக்கப்பட்டதாகவும், அக் கமெராவைப் பயன்படுத்தி எடுக்கப்பட்ட பாதுகாப்பு பிரதேசங்கள் குறித்ததான புகைப்படங்கள் பல விடுதலைப் புலிகள் தலைமைப் பீடத்திற்கு அனுப்பப்பட்டிருக்கலாம் எனவும் பொலிசார் சந்தேகம் கொண்டுள்ளனர்.

---

## சந்தை விலை விபரம் (31-05-1993)

### யாழ். மாவட்ட சராசரி சில்லறை விலைகள்

| தொ. இல. | பொருள்கள் | அலகு | திருநெல்வேலி | பெரிய கடை | சுன்னாகம் | அச்சுவேலி | சங்கானை | நெல்லியடி | பருத்தித்துறை | கொடிகாமம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 01. | குத்தரிசி | கி.கி | 27.50 | 28.65 | 29.15 | 23.65 | 30.00 | 29.00 | 28.00 | 30.50 |
| 02. | கோதுமை மா | '' | 13.00 | 12.65 | 13.15 | 13.65 | 13.00 | 13.00 | 13.30 | 13.50 |
| 03. | சீனி | '' | — | 44.80 | 65.00 | 60.65 | — | 40.30 | 51.65 | — |
| 04. | கத்தரி | '' | 39.00 | 55.65 | 37.65 | 28.65 | 41.30 | 34.30 | 42.65 | 39.00 |
| 05. | வெண்டி | '' | 32.30 | 40.65 | 24.65 | 21.30 | 22.65 | 28.00 | 40.00 | 40.00 |
| 06. | பாகல் | '' | 35.65 | 46.65 | 42.65 | 45.00 | 39.30 | 60.00 | 39.30 | 46.50 |
| 07. | புடோல் | '' | 26.00 | 30.00 | 25.00 | 21.30 | 20.00 | 20.00 | 20.65 | — |
| 08. | பயற்றங்காய் | '' | 51.65 | 54.65 | 39.30 | 56.65 | 60 00 | 40.00 | 48.00 | 35.00 |
| 09. | தக்காளி | '' | 85.00 | 84.30 | — | — | 60.00 | 80.00 | — | — |
| 10. | வாழைக்காய் | '' | 24.00 | 33.30 | 24.65 | 27.00 | 31.65 | 30.00 | 32 65 | 31.65 |
| 11. | பீற்றூட் | '' | 31.00 | 36.30 | 26.00 | 60.00 | 22.65 | — | 36.65 | 27.50 |
| 12. | தேங்காய் | ஒன்று | 19.50 | 16.50 | 18.50 | 18.65 | 18.80 | 16.50 | 17.50 | 11.00 |
| 13. | பச்சைமிளகாய் | கி.கி | 81.60 | 87.65 | 71.65 | 113.30 | 130.00 | 76.65 | 76.65 | 61.65 |
| 14. | எலுமிச்சை | '' | 190.00 | 171.65 | 166.65 | 111.65 | 200.00 | 120.00 | 116.65 | 160.00 |
| 15. | வெங்காயம் | '' | 13.35 | 33.30 | 19.30 | 23.30 | 23.30 | 22.00 | 25.00 | 23.00 |
| 16. | கப்பல் வாழைப்பழம் | '' | 31.00 | 34.65 | 30.00 | 33.00 | 30.00 | 40.00 | 30.00 | 30.00 |
| 17. | இறால் | '' | 120.00 | 113.30 | 100.00 | 78.30 | 93.30 | — | 150.00 | — |
| 18. | பெரியமீன் | '' | 190.00 | 165.00 | 180.00 | 175.00 | 150.00 | 137.50 | 175.00 | 100.00 |
| 19. | சிறியமீன் | '' | 80.00 | 83.75 | 100.00 | 78.50 | 90.00 | — | 50.00 | — |
| 20. | முட்டை | ஒன்று | 09.00 | 09.80 | 08.30 | 08.40 | 08.00 | 08.00 | 08.65 | 07.00 |

தகவல்:- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

ஈழநாதம்

## சட்டம் ஒழுங்கு பற்றி புதிய ஆளுநர் கவலை

தமிழ்நாட்டின் சட்டம், ஒழுங்கு நிலைமை நாடு முழுமைக்கும் கவலையளிப்பதாக தமிழகத்தின் புதிய ஆளுநர் டாக்டர் சென்னா ரெட்டி கூறியுள்ளார்.

தமிழ்நாட்டின் பதினைந்தாவது ஆளுநராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் மாநில மக்களுக்கு வானொலி மூலம் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்; தமிழ்நாட்டில் சில பிரச்சினைகள் இருப்பது பற்றி தான் ஏற்கனவே அறிந்திருப்பதாக குறிப்பிட்டார்.

## ஆளுநர் உரைகுறித்து புதிய சர்ச்சை

(சென்னை)

தமிழகத்தில் புதிய ஆளுநராக டாக்டர் சென்னா ரெட்டி பதவி ஏற்றதையடுத்து அவர் நேற்று முன்தினமிரவு வானொலி தொலைக்காட்சி மூலம் மாநில மக்களுக்கு ஆற்றிய உரைகுறித்து புதிய சர்ச்சை ஒன்று எழுந்துள்ளது.

சென்னை வானொலி மற்றும் தொலைக்காட்சி என்பன ஆளுநர் ஆங்கிலத்தில் ஆற்றிய உரையை தமிழில் மொழி பெயர்த்து வழங்கின. இதில் ஆளுநர் தனது உரையில் ''தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நிலைமையில் எனக்கு திருப்தியில்லை'' என குறிப்பிட்டதாக வானொலி மற்றும் தொலைக்காட்சியில் தெரிவிக்கப்பட்டது.

இதை நேற்று மறுத்த தமிழக ஆளுநர் அலுவலகம் ஆளுநர் சென்னாரெட்டி தனது உரையில் மாநில சட்டம் ஒழுங்கு பற்றி தனது கருத்து எதையும் தெரிவிக்கவில்லை என்றும், அவரின் ஆங்கில உரை சரியாக மொழிபெயர்க்கப்படவில்லை என்றும் நேற்று அறிக்கை விடுத்தது.

## வெள்ள நிவாரணத்திற்கு ரூபா 12லட்சம் ஒதுக்கீடு

(கொழும்பு)

தென்பகுதி வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டோருக்கு உதவுவதற்காக ரூபா பன்னிரண்டு லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் மீட்புப்பணிகளில் விசேட பொலிஸ் அணியினரும், கடற்படையின் சுழியோடிகளும் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக கூறப்படுகின்றது. இந்த வெள்ள அனர்த்தங்களில் சிக்கி இருவர் உயிரிழந்துள்ளனர் என்றும், நூற்றுக் கணக்கான வீடுகள் சேதமடைந்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

வட பிராந்திய சிகை அலங்கரிப்பாளர்

**சங்கங்களின் சமாசம்**

**முக்கிய அறிவித்தல்**

எமது சமாசத்தினால் இன்று (2-6-93) புதன்கிழமை நடைபெற இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் நிறுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் (16-6-93) புதன்கிழமை சீட்டிழுப்பு நடைபெற்று முடிவுகள் (18-6-93) பத்திரிகைகளில் வெளியிடப்படும். அதுவரை சீட்டிழுப்புக்கான துண்டுகள் விற்பனை நீடிக்கப்பட்டுள்ளது.

ஆதரவிற்கு நன்றி!

சூசை எட்வேட், தலைவர்.   (சி/6745)   ச. அன்ரன் இராசநாயகம், செயலாளர்.

**தேவை**

லேத் (கடைச்சல்) வேலைக்கு அனுபவம் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

5-ம் திகதி மு.ப. 10-00மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

தொடர்பு:
ஈழநாதம்,
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம். [5018]

**SCIENCE COLLEGE**

**விஞ்ஞானக் கல்லூரி**

பெருமாள் கோவில் அருகாமை,
யாழ்ப்பாணம்.

95 A/L

## மத்திய அரசு மீதான குற்றச்சாட்டை வாபஸ் பெறத்தவறின் விளைவுகள் பயங்கரமாகும்

### ஜெயலலிதாவிற்கு காங்கிரஸ் எச்சரிக்கை

(சென்னை)

தமது ஆட்சியை கவிழ்க்க மத்திய அரசும், மத்திய உளவு நிறுவனமும் சதிசெய்வதாக முதலமைச்சர் ஜெயலலிதா கூறிய குற்றச்சாட்டை அவர் வாபஸ்பெறவேண்டும். இல்லையேல் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என தமிழக சட்டப்பேரவை எதிர்க் கட்சித் தலைவர் எஸ் ஆர். பாலசுப்பிரமணியம் எச்சரித்துள்ளார்.

நேற்று சென்னையில் செய்தியாளர்களிடையே பேசிய அவர், விடுதலைப் புலிகளுக்கு மத்திய அரசு உதவி செய்கின்றது என ஜெயலலிதா கூறியிருப்பது பொறுப்பற்ற குற்றச்சாட்டு. சைதாப்பேட்டை சிறையிலிருந்து ராஜீவ் கொலையில் முக்கிய சாட்சியான சார்ள்ஸ்நவாஸ் தப்பியது குறித்து ஜெயலலிதா கூறியது தவறு. நவாஸை கவனமாக கண்காணிக்கும்படி மத்திய புலனாய்வுத்துறை தமிழக அரசுக்கு கூறியிருந்ததை ஜெயலலிதா மூடி மறைக்கின்றார் என குற்றஞ்சாட்டினார்.

தப்பிச்சென்ற சார்ள்ஸ் நவாஸ் போராளியா, முக்கிய சாட்சியோ அல்ல என மத்திய புலனாய்வுத்துறை தெரிவிக்கவில்லை என ஜெயலலிதா கூறியிருப்பது தொடர்பாக உண்மையை கண்டறிய பகிரங்க பொதுவிசாரணை நடத்துமாறு. அந்த விசாரணையில் ஜெயலலிதா கூறியவை தவறு என நிரூபிக்கப்பட்டால் அவர் பொதுவாழ்விலிருந்து விலகிவிட வேண்டும் எனவும் பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

இந்திய அமைதிப்படை குறித்து ஜெயலலிதா கூறிய கருத்து அப்படையை இழிவுபடுத்துகிறது. இது தேச விரோதமான செயல். ஜெயலலிதாவும் அவரது அமைச்சர்களும் கோடிக்கணக்கில் சொத்து சேர்த்துவிட்டனர் என மக்கள் நம்புகின்றனர். ஜெயலலிதாவும் அவரது குடும்பத்தவரும் அமைச்சர்களும் சொத்து விபரத்தை வெளியிட வேண்டும் என்றும் அவர் கோரினார்.

தம்மைக் கொல்ல புலிகள் சதிசெய்வதாக ஜெயலலிதா அடிக்கடி கூறுவது திசைதிருப்பும் போக்காகும் என்றும் எஸ் ஆர். பாலசுப்பிரமணியம் கூறினார்.

## இறந்த

இப்பன்றி இறந்து ஆறு நாட்களுக்கு மேலிருக்கும் என்றும் இப்பன்றியை இவர்கள் பிடித்துக் கொண்டு வந்திருந்தால் அது குறைந்தது 50,000 ரூபா பெறுமதிமிக்கதெனவும் தெரிவித்தார்.

இதுபற்றி யாழ். மாநகர சபை வைத்திய அதிகாரி பணிமனையில் கேட்டபோது பொதுமக்கள் இவ்வாறான இறைச்சி விற்பனை நடந்தால் உடனடியாக மாநகரசபை வைத்திய அதிகாரியின் பணிமனையுடன் தொடர்புகொள்ளுமாறும் இறைச்சி வாங்கும்போது மாநகரசபையின் முத்திரை பதிக்கப்பட்டுள்ளதா என்று பார்த்து வாங்கும்படியும் பாவனையாளர்களை கேட்டுள்ளதாக தெரிவித்தது. (சி)

## உதைபந்தாட்டம்

யாழ். மாவட்ட பிரதேச செயலக பிரிவுகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இன்றைய போட்டிகளாக கரவெட்டி பிரதேச செயலக பிரிவை எதிர்த்து, சண்டிலிப்பாய் பிரதேச செயலகப்பிரிவும், சங்கானை பிரதேச செயலகப் பிரிவை எதிர்த்து கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவும் விளையாடவுள்ளன. மேற்படி போட்டிகள் புத்தூர் வீனஸ் விளையாட்டு மைதானத்தில் இன்று மாலை 3.00 மணிக்கு ஆரம்பமாகும்.

## மீனவர்

வளைத்துக் கைதுசெய்து பலமாகத் தாக்கியபின் கடலில் தூக்கிவீசியதுடன் படகுகளில் இருந்த என்ஜின்களையும் தூக்கி கடலில் வீசினர். அத்துடன் இவர்கள் வைத்திருந்த 125 லீற்றர் எரிபொருளையும் கடலில் ஊற்றி விட்டுச் சென்றனர்.

மேற்படிசம்பவத்தில் முனை கொட்டடியைச் சேர்ந்த க. அந்தோனி, அ. ரூட், ப. ராசன், ப. அழகையா, குமார், றொபின்சன். இரத்தினம், அருள்நேசன் குணம், தங்கத்துரை மரியதுரை, மரிய

## 41-ம் நாள் நினைவலைகள்

மண்ணுலகம்

03



விண்ணுலகம்

23

**உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்**

**01-06-93**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9612

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

41-9038, 28-3029, 42-6511, 28-9633 24 4457
24-1259, 26-3605, 26 3530, 26 0560, 42-0704
24 0416, 36-2937, 42-3419, 24-7087

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
இல்லை

## கரும்புலி வீரர்களின் உருவப்படங்கள்

கீழ்வரும் கரும்புலிகளாக வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களின் உருவப்படங்கள் தற்போது வெளிவந்துள்ளன. இம் மாவீரர்களின் உருவப்படங்கள் தேவையானோர் மாவீரர் பணிமனையில் அல்லது மாவட்ட அரசியல் துறைச்செயலகத்தில் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கப்டன் மில்லர்
மேஜர் காந்தரூபன்
கப்டன் கொலின்ஸ்
கப்டன் வினோத்
லெப். கேணல் போர்க்
மேஜர் டாம்போ
கப்டன் சிதம்பரம்
கப்டன் ஜெபந்தன்

இம் மாவீரர்களின் உருவப்படங்களைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் தமிழீழ மாவீரர் பணிமனையுடன் அல்லது மாவட்ட அரசியல்துறைச் செயலகங்களுடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## மாவீரர் உருவப்படங்கள் வெளிவந்துள்ளன

கீழ்வரும் மாவீரர்களின் உருவப்படங்கள் தற்போது வெளிவந்துள்ளன. இம் மாவீரர்களின் உருவப்படங்கள் தேவையானோர் மாவீரர் பணிமனையில் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2-ம லெப். தபேசா, நல்லூர், யாழ்ப்பாணம்.
வீ. வே. ரூபிகா, மன்னார்
வீ. வே. றிசானா, கிண்ணியா
வீ. வே. றோம், இரணைமடு/கிளிநொச்சி
வீ. வே. சீராளன், கிளிநொச்சி

றன.

5-ம் திகதி மு.ப. 10-00மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

தொடர்பு:
ஈழநாதம்,
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம். [5018]


# SCIENCE COLLEGE
## விஞ்ஞானக் கல்லூரி

பெருமாள் கோவில் அருகாமை,
யாழ்ப்பாணம்.

**95 A/L**

ஆரம்பம்: 3-06-93 வியாழன் 4-30 p. m.

தூய பிரயோக கணிதம்
திரு. குணசிங்கம், B. Sc. (Hons.)

விலங்கியல்
திரு. ஈஸ்வரதாசன், B.Sc (Cey.) Dip in Ed.

★ 95 AL ஆரம்பத்தில் இருந்து அனுமதி வழங்கப்படும்.
★ 94 AL புதிய விலங்கியல் வகுப்பு ஆரம்பமாகவுள்ளது.
★ 93 AL Zoology Model Question Paper Class ஆரம்பமாக உள்ளது.
★ நேர அட்டவணையை நிறுவனத்தில் பெறலாம்.

(சி-6729) —நிர்வாகி


# பதவி வெற்றிடம்

**பதவி:** வெளிக்கள உத்தியோகத்தர், தகவல் சேகரிப்பாளர்

**கல்வித் தகைமை:** க. பொ. த. (உ/த) பரீட்சையில் சித்தி

**வயதெல்லை:** 36வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும்

**விண்ணப்ப முடிவுத் திகதி:** 06-06-1993

**அனுப்ப வேண்டிய முகவரி:** தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம், மாவட்டச் செயலகம், கோண்டாவில்.

குறிப்பு: 1. யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரிகள் அனைவரும் 9 6-1993 அன்று காலை 9-00 மணிக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழக மாவட்டச் செயலக பொன்னம்மான் கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறும் நேர்முகப்பரீட்சைக்குத் தவறாது சமுகமளித்தல் வேண்டும். எந்தப்பரீட்சார்த்திக்கும் தனிப்பட்ட அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படமாட்டாது

(சி/6751)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூன் மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


இறைச்சி விற்பனை நடந்தால் உடனடியாக மாநகரசபை வைத்திய அதிகாரியின் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறும் இறைச்சி வாங்கும்போது மாநகரசபையின் முத்திரை பதிக்கப்பட்டுள்ளதா என்று பார்த்து வாங்கும்படியும் பாவனையாளர்களை கேட்டுள்ளதாக தெரிவித்தது. (சி)

பொதுவாழ்விலிருந்து விலகி விட வேண்டும் எனவும் பால சுப்பிரமணியம் தெரிவித்தார்.

இந்திய அமைதிப்படை குறித்து ஜெயலலிதா கூறிய கருத்து அபபடையை இழிவுபடுத்துகிறது. இது தேச விரோதமான செயல். ஜெயலலிதாவும் அவரது அமைச்சர்களும் கோடிக்கணக்கில் சொத்து சேர்த்துவிட்டனர்

# 41-ம்நாள் நினைவலைகள்



| மண்ணுலகம் | விண்ணுலகம் |
|---|---|
| 03 | 23 |
| 12 | 04 |
| 1944 | 1993 |

## பிரான்சீஸ் சிந்தாத்துரை

எங்கள் அன்புத் தெய்வமே, அப்பா எங்களைவிட்டு பிரிந்து 41ஆம் நாள் ஆனதப்பா. இனி எப்போதப்பா உங்கள் முகம் காணப்போகின்றோம். உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம.

வேளாங்கன்னி வீதி,
திருவள்ளுவர்புரம்,
தையிட்டி,
காங்கேசன்துறை (5019)

பிரிவால் துயருறும்
பிள்ளைகள்:
ரமேஸ், உசா, அமலா
மற்றும் உறவினர்கள்.

# மரண அறிவித்தல்

## திரு. கிளேற்றன் நல்லையா

(உரிமையாளர்: ஒளி இல்லம் (BRIGHT HOUSE) அந்தியகால சேவை. பிரதான வீதி, யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதான வீதியைச் சேர்ந்தவரும் தற்போது றக்கா ஒழுங்கையில் வசித்தவருமான கிளேற்றன் நல்லையா அவர்கள் கிளிநொச்சியில் காலமானார். இவர் காலம் சென்ற நல்லையா, திருமதி ஆசைமுத்து நல்லையா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும், காலம் சென்ற சுதந்திரநாயகி (தேவி) அவர்களின் அன்புக்கணவரும், எடித் (யா/தி. கு க. மடம்), ஜஸ்மின் (யா/தி. கு. க. மடம்), பிரதீபன் (புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அருமைத் தகப்பனாரும், காலஞ்சென்ற யோண்பிலிப் யோசேப் (றோஸ் ஆட்ஸ்) திருமதி நல்லம்மா யோசேப் ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திரு. ஜேக்கப் புஸ்பராசா

16, றக்கா ஒழுங்கை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். [5020]

யாட்டு மைதானத்தில் இன்று மாலை 3. 00 மணிக்கு ஆரம்பமாகும்.

### மீனவர்

வளைத்துக் கைதுசெய்து பலமாகத் தாக்கியபின் கடலில் தூக்கிவீசியதுடன் படகுகளில் இருந்த என்ஜின்களையும் தூக்கி கடலில் வீசினர். அத்துடன் இவர்கள் வைத்திருந்த 125 லீற்றர் எரிபொருளையும் கடலில் ஊற்றி விட்டுச் சென்றனர்.

மேற்படிசம்பவத்தில் முனைகொட்டடியைச் சேர்ந்த க. அந்தோனி, அ. ரூட், ப. ராசன், ப. அழகையா, குமார், றொபின்சன், இரத்தினம், அருள்நேசன் குணம், தங்கத்துரை மரி[illegible], மரியநாயகம் ஆகியோரே கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்கானவர்களாவர். (யோ)

### உண்ணா விரதம்

மிட்டு இந்த மகஜரை அனுப்பியிருந்தனர். ஆனால் இதுவரை சிறிலங்கா அரசதரப்பில் மெளனம் சாதிக்கப்பட்டு வருகிறது.

மூன்று ஆண்டுகளாக தாம் சிறை வைக்கப்பட்டுள்ளதால் விரக்தியடைந்துள்ளதாகவும், தம்மை விடுவிக்க அரசு நடவடிக்கை எடுக்காதது குறித்து ஆழ்ந்த கவலை அடைவதாகவும், இவர்கள் தமது மகஜரில் குறிப்பிட்டுள்ளனர்.

### தமிழர்

பொலிஸ் அதிகாரி ஒருவர் மீது நாகராஜன் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் பொலிஸார் திருப்பிச் சுட்டத்தில் நாகராஜன் பலியானதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

### தமிழ் இளைஞர்

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் பொலிஸ் நிலையங்களில் தங்களைப் பதிவுசெய்துவிட்டு வீடுகளில் வாடகைக்கு அறையெடுத்து தங்கிய இளைஞர்கள் மற்றும் அடையாள அட்டை இல்லாதோரும் சில வீடுகளின் சொந்தக்காரர்களும் அடங்குவர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### புலனாய்வுத்துறை

பொலிஸ் நிலையங்களில் பல்வேறு காரணங்களுக்காகவும் தடுத்து வைக்கப்படும் வடக்கு-கிழக்கைச் சேர்ந்த தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் தேசிய புலனாய்வு பணியகத்தினதும் குற்றப்புலனாய்வு பணியகத்தினதும் சிபார்சுக்கு அமையவே விடுதலை செய்யப்படுவார்கள் என அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

மேஜர் டாம்போ
கப்டன் சிதம்பரம்
கப்டன் ஜெபந்தன்

இம் மாவீரர்களின் உருவப்படங்களைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் தமிழீழ மாவீரர் பணிமனையுடன் அல்லது மாவட்ட அரசியல்துறைச் செயலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# மாவீரர் உருவப்படங்கள் வெளிவந்துள்ளன

கீழ்வரும் மாவீரர்களின் உருவப்படங்கள் தற்போது வெளிவந்துள்ளன. இம் மாவீரர்களின் உருவப்படங்கள் தேவையானோர் மாவீரர் பணிமனையில் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 2-ம லெப். தபேசா, | நல்லூர், யாழ்ப்பாணம். |
| வீ. வே. ரூபிகா, | மன்னார் |
| வீ. வே. றிசானா, | கிண்ணியா |
| வீ. வே. றோம், | இரணைமடு/கிளிநொச்சி |
| வீ. வே. சீராளன், | கிளிநொச்சி |
| வீ. வே. ஜெகன், | கிளிநொச்சி |
| வீ வே. ரமேஸ், | அளவெட்டி |
| கப்டன் பரன், | மாங்குளம் |
| லெப். காந்தி, | மாங்குளம் |
| லெப். லோகி, | புலோலி |
| லெப். கந்தன், | நெழுக்குளம் |

இம்மாவீரர்களின் உருவப்படங்களைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் தமிழீழ மாவீரர் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.


## யாழ்நகர்
# ஸ்ரீதர் திரையரங்கில்

முல்லை மாவட்டக் கலைஞர்களின்
இரண்டாவது வெற்றிப் படைப்பு

# "இது எங்கள் தேசம்"

தினசரி மாலை 4 மணி, 6 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10. 30 மாலை 4 மணி, 6 மணி

[சி-6736]


நல்லூர் பிரதேச சபை — திருநெல்வேலி யாழ்ப்பாணம்

# கேள்வி அறிவித்தல் 1993

13. 11. 1992ஆம் திகதிய ஈழநாதம் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி விடயம் சம்பந்தமாக கீழ்க் காணும் இறைச்சிக்கடைக்கு என்னால் கேள்விகள் மீளவும் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் யாவும் நல்லூர் பிரதேச சபை செயலாளரால் கேள்வி வைப்புப்பணம், பத்திரப்பணம் ஆகியன செலுத்தியதன் பேரில் 9. 6. 93 நண்பகல் 12 00 மணிவரை வழங்கப்படும். கேள்விகள் யாவும் 10 6.93 நண்பகல் 12 00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். மேலதிக விபரங்கள் தேவைப்படின் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல. | குத்தகையின் தன்மை | கே. ப. பணம் | கே. வை. பணம் |
|---|---|---|---|
| 1. | கொ. உ. அலுவலகம் மாட்டிறைச்சிக்கடை | 200/- | 1000/- |

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
31. 05. 93

விசேட ஆணையாளர்
நல்லூர் பிரதேச சபை

(சி-6743)